

# CIA NEWS LETTER

## கவுன்சில் ஆப் இந்தியன் அக்குபஞ்சரிஸ்ட்ஸ்


**Dr. C.A. ரவி,** நிறுவனர், தலைவர், ஆசிரியர்

**தனிச்சுற்று மட்டும்** | **CIA - 1** | **June - 2017** | **MAIL - 2**



**CIA Executive Members :** Dr. C.A. Ravi, Founder & President, Prof. Dr. Usharavi, Cheif Advisor, Dr. K.G. Manoj, Seceretary, Dr. A. Rajalingam, Treasurer, Dr. A. Sankaran, Executive President, Dr. Asukavi M. Navaneetha Krishnan, Vice President, Dr. J. AnanthaKrishnan, Joint Secretary, Dr. R. Rama Chandran, Joint Secretary, Dr. G. Bala Kuppuraj, Executive Member, Dr. P. Mariadasan, Executive Member, Dr. A. Anandharaju, Executive Member, Dr. U. Arjunan, Executive Member, Dr. S. Sree Ramakrishnan, Executive Member, Dr. Annadurai, Executive Member, Dr. K.S. Ganesh, Advisor, Dr. N.S. Ezhilone, Advisor, Dr. C. Kannabhiran, Advisor

**Zonal President :** Dr. Umarsharif, Dr. R. Banupriya, Dr. K. Rosily, Dr. Krishnasivachalapathy **Vice President :** Dr. J. Subhu Rani, Dr. B. Palanimurugan, Dr. S.Po. Ramasubrmaniam, Dr. D. Senthikumar, Dr. V. Shanmugaraja

**CIA Karnataka State Executive Members :** Dr. N.S. Mohamed Hifzullah, Convenor, Dr. K. Kamala Kannan, Joint Convenor, Dr. K. Nazeer Pasha, Joint Convenor, Dr. K. Nagarajan, Executive Member, Dr. R. Vinod, Executive Member, Dr. N.S. Zafrulla, Executive Member, Dr. T.V. Reddappa, Executive Member, Dr. C. Kawal Naz, Executive Member, Dr. Nisar Ahmed, Executive Member




அன்பின் CIA உறுப்பினர்களுக்கு

அன்பு வணக்கம் !

07-05-2017 அன்று நமது CIAவின் பொதுக்குழு கூட்டம் மிக சிறப்பாக **HOTEL ANNAMALAI INTERNATION (A/C) Pondicherry** -யில் நடைபெற்றது. பொதுக்குழு கூட்டத்திற்கு வருகைதந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது மனப்பூர்மான நன்றியும், வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறேன். மேலும் பொதுக்குழு கூட்டத்திற்கு வர இயலாத நமது உறுப்பினர்கள் அது குறித்த தகவல்களை கடிதம் மூலமாக அனுப்பி கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள். இன்னும் சிலர் வர முடியாத காரணம் குறித்து எந்த ஒரு தகவலையும் நிர்வாகத்திற்கு தெரிவிக்கவில்லை. அவர்கள் கூடிய விரைவில் அது குறித்து விவரங்களை தெரிவிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமின்றி இன்னும் ஒரு சில உறுப்பினர்கள் வருடசந்தா செலுத்தாமல் இருக்கின்றார்கள். தயவு கூர்ந்து உரிய காலத்தில் சந்தா தொகையை செலுத்தி CIAவின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நமது CIA ஒரு மாபெரும் போராட்டம் என்றே சொல்லலாம். மாபெரும் போராட்டத்தை கையில் எடுத்து இருக்கிறது. என்னவென்றால் இன்றைக்கு அக்குபஞ்சர் அப்படிங்கிறது ஒரு 30 புள்ளிகளை வைத்தோ, 40 புள்ளிகளை வைத்தோ, 60 புள்ளிகளை வைத்தோ அளிக்கக்கூடிய கிசிச்சை முறை அல்ல. ஆங்காங்கே ஒரு சிலர் இதுபோல் பரப்பி அக்குபஞ்சர் சிகிச்சை முறையை கலங்கப்படுத்தியுள்ளார்கள் என்பது வேதனையான விஷயம். இப்படிபட்ட சூழ்நிலையில் நமது CIA உறுப்பினர்களுக்கு மீண்டும் ஒரு புத்துணர்வு பயிற்சி புதிதாக தருவது என பொதுக்குழுவில் முடிவு செய்யபட்டு அது குறித்த விவரம் தீர்மானமாகவே நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் விவரம் இதே CIA News Letter-ல் அடுத்தடுத்த பக்கங்களில் நீங்கள் காணமுடியும்.

CIA உறுப்பினர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் 4, 5, 6 தேதிகளில் நடைபெற உள்ள அக்குபஞ்சர் புத்தாக்க பயிற்சிக்கு 2010க்கு பிறகு CIAவில் உறுப்பினராக இணைந்தவர்கள் கலந்து கொள்ளலாம். இவர்களுக்கு எந்த ஒரு கட்டணமும் கிடையாது. ஆனால் இவர்கள் நடந்து முடிந்த பொதுக்குழுவில் கலந்து கொண்டவராக இருக்க வேண்டும். நடந்து முடிந்த பொதுக்குழுவில் கலந்து கொண்டவர்கள் மட்டும் 2010க்கு பின் CIAவில் உறுப்பினராக இணைந்தவர்கள் இந்த புத்துணர்வு பயிற்சியில் கலந்து கொள்ளலாம். அதேபோல் CIA பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளாத உறுப்பினர்கள் 2010க்கு பின் பதிவு பெற்றவர்கள் இதற்காக Council-ன் கட்டிட வளர்ச்சிக்காக ரூ.2000/- நன்கொடையாக கொடுத்து இந்த பயிற்சியில் கலந்து கொள்ளலாம். பயிற்சியில் கலந்துகொள்ள விருப்பம் உள்ள அனைவரும் எதிர்வரும் ஜுலை 10-ந் தேதிக்குள் தங்களது பெயர்களை பதிவு செய்ய வேண்டும். எக்காரணத்தை கொண்டும் பெயர் பதிவு செய்யாதவர்களை பயிற்சியில் அனுமதிக்க மாட்டோம். இன்றைக்கு பெயர் பதிவு செய்துவிட்டு, அன்றைக்கு வராமல் இருந்துவிடலாம் என்று பெயர் பதிவு செய்துவிட்டு வராத உறுப்பினர்களுக்கு கட்டாயமாக ரூ.500/- அபராதமாக செலுத்த வேண்டியிருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை அனைத்தும் கிட்டத்தட்ட இராணுவ விதிமுறைப்படிதான் CIAவை வழி நடத்த இருக்கிறோம். எதற்காகவும் எந்த ஒரு Compromise-ம் பண்ணவேண்டியது அவசியம் இல்லை என்ற கோணத்தில் இதை நாம் செயல்படுத்துகிறோம். எனவே தயவு செய்து இதற்கு முழுமையான ஒத்துழைப்பை தாருங்கள். Council of Indian Acupuncturists மூலமாக நிறைய விசயங்கள் Slow & Study யாக நாம் செய்து கொண்டிருக்கிறோம். அதை முழுமையாக செயல்படுத்த வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது.

எனவே இந்த வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ளுங்கள். இது 2010க்கு பிறகு சேர்ந்த உறுப்பினர்களுக்கு மட்டும்தான் என்று இல்லை. அதற்கு அடுத்து உள்ள உறுப்பினர்களுக்கும் எந்த எந்த மாதங்களில் பயிற்சி என்பதனை குறித்து நமது இந்த CIA News Letter-ல் இருக்கிறது. அதை சரியாக பார்த்து கடைபிடிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி ! வணக்கம்.

அன்புடன்

**Dr. C.A. ரவி**

நிறுவனர் & தலைவர் - CIA

## REFRESHING ACUPUNCTURE CLASS DETAILS

**NOTE**

Council of Indian Acupuncturists has done 3 batches based on their year of registration in CIA to follow Acupuncture Refreshing Class.

Members who are willing to attend the same must register their name in earlier.

Once registered, but if you are not able to attend the class, penality Rs.500/- will be collected & handover to CIA building committee.

Hearty Welcome to All CIA Members !

CIA is offering a golden opportunity to all CIA members who, joined CIA after 2010 for a free Acupuncture Refreshing Class on August 4th, 5th, 6th.

**Note :** Members who paid their subscription & attended the G.B. meeting can attend the Refreshing Class without any fees.

Welcome to CIA Members!

Members those who joined from 2005 to 2009 can attend the Acupuncture Refreshing Class in September (or) October. Members have to register in their name earlier.

Welcome to CIA Members!

Members who joined before 2005 can attend their Acupuncture Refreshing Class in January (or) February 2018. Members who register only will be allowed to attend the Refreshing class for Acupuncture.

**FOR NON CIA MEMBERS**

Dear,

Council of Indian Acupuncturists has been formed before 17 years for Acupuncturists who practice Acupuncture only and to give them proper protection. If you are practicing Acupuncture can join CIA. All details are given in website.

www.ciaglobal.org or Contact Cell : 93676 22257

Office timing : 10.00 am to 5.00 pm.



Dear CIA Members,

Best wishers.

I do thank each & every CIA member for honouring me in CIA General Body Meeting as Chief Advisor for CIA.

I assure that this adds many responsibility and attitude to guide CIA in right path.

On coming August 4th, 5th, 6th Acupuncture Refreshing class is decided to conduct by CIA under my supervision.

I would like to update each & every CIA member to shine in Acupuncture field, so be stay with us.

These opportunities are rare, please don't miss and also will give more knowledge, with confident in practice.

Meet you in August.

*With regards,*

**Prof. Dr. USHARAVI**

Chief Advisor - CIA

## மறு நினைவூட்டல் பயிற்சி விபரம்

### மறு நினைவூட்டல் பயிற்சிக்கான ஒரு முக்கிய குறிப்பு

CIA மூலமாக CIAவில் இணைந்திருக்கும் உறுப்பினர்களை மூன்று விதமாக பிரித்து அவர்களுக்கு சம்மந்தமாக ஒரு புத்துணர்வு பயிற்சி கொடுக்க இருக்கிறோம்.

இந்த பயிற்சியில் நீங்கள் முன்பதிவு செய்ய வேண்டும் என்பது அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். முன்பதிவு செய்துவிட்டு பயிற்சிக்கு வராமல் இருக்கும் உறுப்பினர்களிடம் இருந்து கட்டாயம் ரூ.500/-னை கட்டிட வளர்ச்சிக்காக நன்கொடையாக வசூல் செய்யப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பின் உறுப்பினர்களுக்கு வணக்கம் !

CIA உறுப்பினர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பினை நிர்வாகம் உங்களுக்காக ஏற்படுத்தி தருகிறது. CIAவில் 2010ம் ஆண்டிற்கு பிறகு உறுப்பினராக இணைத்த உறுப்பினர்களுக்கு CIAன் மூலமாக சிறப்பு இலவச மறு நினைவூட்டல் பயிற்சி எதிர்வரும் ஆகஸ்ட் 4,5,6 தேதிகளில் அளிப்பது என முடிவு செய்துள்ளோம்.

**குறிப்பு :** CIA சந்தாவினை செலுத்தி பின் CIA G.B. Meeting-ல் கலந்துகொண்ட உறுப்பினர்களுக்கு மட்டும் இப்பயிற்சி இலவசம்.

அன்பின் CIA உறுப்பினர்களுக்கு !

நீங்கள் CIAவில் 2005 முதல் 2009க்குள் உறுப்பினராக இணைந்தவரா? இதோ உங்களுக்காக Acupuncture-க்கான புத்தணர்வு & புத்தாக்க பயிற்சி எதிர்வரும் செப்டம்பர் (அ) அக்டோபர் மாதத்தில் நடைபெறும். அதற்கான தேதிகள் உங்களுக்கு CIA Office நிர்வாகம் உங்களுக்கு தெரியப்படுத்தும். அதற்கு முன் பதிவு செய்திருக்க வேண்டும்.

CIA உறுப்பினர்களுக்கு வணக்கம் !

2005-க்கு முன் நீங்கள் CIAவில் உறுப்பினராக இணைந்தவரா? இதோ உங்களுக்காக மறு நினைவூட்டல் பயிற்சிக்கான விவரம். உங்கள் அனைவருக்கும் 2018 ஜனவரி (அ) பிப்ரவரியில் நடைபெறும். நீங்களும் முன்பதிவு செய்ய வேண்டும். முன் பதிவு செய்பவர்களுக்கு மட்டும் அனுமதி உண்டு என்பதனை உறுப்பினர்களான உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்

**CIA நிர்வாகம்**

## 19th GB MEETING

நாள் : 07.05.2017 ஞாயிற்றுக்கிழமை

இடம் ஹோட்டல் அண்ணாமலை இன்டர்நேஷனல், புதுச்சேரி.

- ❖ நமது CIAவின் உறுப்பினர் Dr. செந்தில்குமார் மற்றும் Dr. ஆண்டனிராஜ் ஆகிய இருவரின் மறைவிற்கு CIAவின் சார்பாக வருத்தம் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.
- ❖ நமது CIAவில் 2010 ஆம் ஆண்டிற்கு பிறகு உறுப்பினராக இணைந்த உறுப்பினர்களுக்கு CIAவின் மூலமாக சிறப்பு இலவச மறு நினைவூட்டல் பயிற்சி ஆகஸ்ட் 4, 5, 6 தேதிகளில் அளிப்பது என தீர்மானித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ❖ 2005 முதல் 2009 வரை CIAவில் உறுப்பினராக இணைந்தவர்களுக்கு மறு நினைவூட்டல் பயிற்சி செப்டம்பர் (அ) அக்டோபர் மாதத்தில், 2005க்கு முன் CIAவில் உறுப்பினராக இணைந்தவர்களுக்கு 2018 ஜனவரி (அ) பிப்ரவரியில் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ 2018 ஏப்ரலுக்கு முன்பாக CIAவில் இணைந்த உறுப்பினர்களுக்கு மறு தகுதி தேர்வு நடத்தப்படும். அதில் தகுதியிழப்பிற்கு உள்ளாகும் உறுப்பினர்கள் தகுதியினை வளர்த்து கொள்ள மூன்று மாதம் அவகாசம் வழங்கப்படும். தவறும்பட்சத்தில் CIAல் இருந்து நீக்கப்படுவார் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ நமது உறுப்பினர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் பாலிஸிக்கு பாலிஸி நிறுவனத்திடம் பேசி ஏற்பாடு செய்து கொண்டுள்ளோம். விபத்து மற்றும் மரணம் ஏற்படும்பொழுது உறுப்பினர்களுக்கு பாலிஸி தொகை கிடைக்கும் வண்ணமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணியும் எதிர்வரும் ஜூலை 2017-ல் முடிவடைந்து உறுப்பினர்களுக்கு தெரிவிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ QR பார் புதிய அடையாள அட்டையினை மறுநினைவு பயிற்சிக்கு வரும்பொழுது அந்தந்த உறுப்பினர்கள் வசம் உடனடியாக தரப்படும் வண்ணமாக திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென தனி விண்ணப்பப்படிவம் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது. அதை பூர்த்தி செய்து மெயிலில் மட்டுமே அனுப்பும்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ CIAவின் சொந்த அலுவலகம் கட்ட இலவசமாக இடம் அளித்த நமது தலைவர் Dr. C.A ரவி அவர்கள் மற்றும் Prof. Dr. உஷாரவி அவர்கள் இருவருக்கும் நன்றி தெரிவித்து அனைத்து உறுப்பினர்கள் சார்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ அனைத்து தகுதி வாய்ந்த அக்குபஞ்சர் உறுப்பினர்களும் CIAவில் இணைவதற்கு இலகுவாக வேறு அமைப்புகளில் உள்ள உறுப்பினர்கள் நமது CIAவில் இணைய சிறப்பு சலுகை அளிக்க தீர்மானிக்கப்பட்டு அவ்வாறு வரக்கூடியவர்களுக்கு ரூ.1500/- சலுகை கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.
- ❖ CIAவின் சார்பாக இலவச மருத்துவமனை நடத்திவரும் மருத்துவர்களுக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ CIAவின் சார்பாக இலவச மருத்துவ முகாம் நடத்திய மருத்துவர்களுக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ CIAவின் கட்டிட பணி முழுமையாக நிறைவடைய தேவைப்படும் நிதி ஆதாரத்தை பெருக்குவதற்கு உறுப்பினர்கள் ஒத்துழைப்பும், பொருளாதார உதவியும் அளிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ எதிர்வரும் காலங்களில் சூழ்நிலையை கருத்தில்கொண்டு CIAவின் சட்ட திட்டங்களில் தேவையற்ற & தேவையான இடங்களில் விதிமுறைகளை யோசித்து உறுப்பினர்களின் ஆலோசனையை பெற்று தலைவர் Dr. C.A. ரவி அவர்களுக்கு இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ Prof. Dr. உஷாரவி அவர்கள் வேலை பலுவின் காரணமாக CIAவின் செயலாளர் பதிவியில் இருந்து விலகியதால் Dr. K.G. மனோஜ் அவர்களை செயலாளராக நியமித்து செயற்குழுவில் தீர்மானித்ததை பொதுக்குழு ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- ❖ நமது மரியாதைக்குரிய Prof. Dr. உஷாரவி அவர்களை நிரந்தர தலைமை ஆலோசகராக நியமித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- மாநிலங்களுக்கு ஒரு ஒருங்கிணைப்பு குழு அமைப்பது என்றும், அக்குழுவினை நியமிக்கும் அதிகாரம் தலைவர் அவர்களுக்கு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
- இனிவரும் காலங்களில் தேர்தல் பாண்டிச்சேரியில் மட்டுமே நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. இந்த தேர்தலில் நேரடி வாக்கு பதிவு மட்டுமே ஏற்று கொள்ளப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.
- Dr. A. சங்கரன் அவர்கள் நன்றியுரை வழங்க பொதுக்குழு கூட்டம் இனிதே நிறைவுப்பெற்றது.

---

அன்பின் வணக்கம் !

CIA உறுப்பினர்களுக்கு நமது CIAவின் வருட சந்தாவினை அதன் குறிப்பிட்ட தேதிகளில் செலுத்திய உறுப்பினர்களுக்கு CIAவின் தலைவர் என்ற வகையில் எனது பாராட்டினை தெரிவித்து கொள்கிறேன். அதன்பின் சந்தாவை செலுத்திவிட்டு CIAவின் GB Meeting-க்கு வந்து கலந்துகொண்டு நமது CIAவின் தரத்தை மேலும் ஓங்க செய்த அந்த உறுப்பினர்களுக்கு என் பாராட்டினையும், மகிழ்ச்சியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது சந்தாவினை செலுத்திவிட்டு GB Meetingக்கு வராத உறுப்பினர்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள். நீங்கள் GB Meeting-க்கு வர முடியாத காரணத்தை ஒரு கடிதம் மூலமாக எழுதி CIA Register Office-க்கு எதிரவரும் ஜூலை 10, 2017 தேதிக்குள் வருமாறு அனுப்பி வைக்கவும்.

*CIA Register Office :*

**COUNCIL OF INDIAN ACUPUNCTURISTS**

No.31, 32, Rajagowri Nagar, Koravallimedu, Mathikrishnapuram, Puducherry - 607 402. Cell: 93676 22257

## CIA உறுப்பினர் அல்லாதவர்களுக்கு

அன்பு வணக்கம்!

Council of Indian Acupuncturists (CIA) அமைப்பானது அக்குபஞ்சர் நிபுணர்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டு கடந்த 17 வருடங்களாக சேவையாற்றி வருகின்றது. நீங்கள் அக்குபஞ்சர் தொழில் செய்பவராக இருப்பின் CIAவில் உறுப்பினராக இணையலாம்.

CIAவின் வளைதளத்தில் முழு விபரங்களும் உள்ளது.

Website : www.ciaglobal.org அல்லது அலுவலக நேரத்தில் அலுவலக பொறுப்பாளரை தொடர்பு கொள்ளவும். 93676 22257

## QR CODE ID CARD

நமது CIAவின் உறுப்பினர்களுக்கு புதிதாக QR Code கொண்ட ஒரு ID Card வழங்குவது என நமது பொதுக்குழு கூட்டத்தில் முடிவு செய்திருக்கிறோம். அதன் முடிவாக நமது CIAவின் இணையதலத்தில் அதற்கான விண்ணப்பப்படிவத்தை இணைத்துள்ளோம். அதனை பார்த்து அதனை பூர்த்தி செய்து தருவோருக்கு வரும் காலத்தில் அதற்கான வேலைகளை நமது CIA Office பொருப்பாளர் செய்து புதிய QR Code கொண்ட ID Card-னை அளிப்பார்.

பதிவு செய்யும் முறையினை கீழே குறிப்பிட்டுள்ளேன்.

Website : www.ciaglobal.org
↓
Registration
↓
QR Code Application
↓
Enter the Details
↓
Register

**குறிப்பு :** ஒரு முறைதான் உங்களது விபரங்களை நீங்கள் பதிவு செய்யமுடியும். தவறு ஏதேனும் இருந்தால் CIA Office No. 9367622257 என்ற எண்ணிற்கு அழைத்து தகவலை தெரிவிக்கவும்.

## 19-வது பொதுக்குழு கூட்டத்தில் Dr. C.A. ரவியின் உரை

எனதன்பிற்கினிய CIA உறுப்பினர்கள் அனைவருக்கும்
எனது முத்தாய்ப்பான முதல் வணக்கம் !

இந்திய உணவுகள், வெளிநாட்டு உணவுகள், வறுத்த உணவு, பொரித்த உணவு, ஊர்வன, பறப்பன என விதவிதமான உணவுகளை உண்டு மகிழ்ந்தாலும் கூட இட்லி – சாம்பார், ரசம்–சாதம் இவைகளை வென்றிட உலகில் எந்த உணவும் இல்லை. ஆனால் சுவை மற்றும் நா தடுமாற்றத்தால் பலவிதமான உணவுகளை உட்கொண்டாலும் கூட முழுமை என்பது நமது இட்லி, ரசம் தான் என பெரும்பாலோனோர் கூறுவர். உண்மையும் அது தானே?

இட்லி போர் அடிக்க ஆரம்பித்ததினால் பிரைடு இட்லி, சில்லி இட்லி என வர ஆம்பித்தது இருப்பினும் பாரம்பரிய உணவே உகந்தது.

பாரம்பரியங்களை தாங்கியும் பலபேரின் அக்குபஞ்சர் வாழ்வாதாரத்தை உயர்த்தியும், பல இன்னல், இடர்பாடுகளை தரைமட்டமாக்கியும் இன்றைக்கும் சேவை, பாதுகாப்பே நமது குறிக்கோள் என்று இந்திய அளவில் உயந்து நிற்கும் ஒரே அமைப்பு.

ஆம், அதேதான் அக்குபஞ்சர் உறவுகளே CIA என்ற நம் அமைப்பு மட்டும்தான் பாரம்பரியம் மாறாமல் பந்தா செய்யாமல் பணி மட்டும் செய்து கொண்டுள்ளோம்! இதற்கு என்னுடன் இணைந்து செயலாற்றிக் கொண்டிற்கும் பொறுப்பாளர்கள் தான் முதற்காரணம் அவர்களுக்கும், எனக்கும் வாழிகாட்டியாகவும், வழிதுணையாகவும் இருக்கும் அரசவை வைத்தியர்கள்தான் உறுப்பினர்கள். ஒவ்வொருவரும் என்றால் மிகையல்ல!

சினவரி யேறுபோலுந் திடமுள்ளான்
மனதுமுன்னாள்
கனமென வுயிரைக் காக்குங்
கருணையான் கதித்த சீரோன்
இனமென வுலகங் கொள்ளும்
ஏற்றத்தான் தோற்றத்தானாம்
மனமிகு தயவு முள்ளாள் வைத்திய
னென்னலாமே.

ஒரு மருத்துவன் சொன்ன சொல் தவறாதவனாகித் தன் மனைவியைத் தவிர்த்த ஏனைய பெண்களைத் தன் உடன்பிறப்பாகக் கருதுபவனாகி, பொய்யுரை புகலானாகி, புகழறியுள்ளோனாகி, சொல்லிலும், மனத்திலும் இரக்கம் உடையவனாகி, நைவினை பாவம் இன்றி நன்மையாய் நடப்பதினால் அவன் கொடுக்கும் மருந்து ஆற்றலுடையதாய் இருக்கும் எனக் கூறுகின்றது தமிழ் வாகடம்.

மேற்கூறியது தமிழ் வாகடம் நூல் வைத்தியன் எவ்வாறு இருக்க வேண்டும் என பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வகுத்து வைத்துள்ளதைத்தான் இன்றைய நமது CIA கடைப்பிடிக்கின்றது என நான் உறுதியாக கூறுவேன்.

ஆனால் இன்றைக்கு அக்குபஞ்சர் என்ற அற்புத கலையை அலங்கோலமாக மாற்றிய பெருமை இந்தியாவிலேயே தமிழகத்திற்கு தான் உண்டு என்றால் மிகையல்ல. ஆனால், இது வெட்கப்பட வேண்டிய விசயம். இதை நான் சொல்லுவதற்கு வருத்தமாக இருந்தாலும் என்னைப்போல் உள்ள ஓரிருவரால் மட்டும்தான் இதை சொல்ல முடியும்.

அக்குபஞ்சர் என்ற அற்புத கலைக்கு உயிரோவியமாக ஒரு சிலர் வடிவமைத்தார்கள். ஆனால் பலர் அதை சீரழித்தார்கள். சீரழித்தவர்களைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்பவில்லை. அதே நேரத்தில் அக்குபஞ்சர் என்பது எனக்கு தெரியும் படித்துள்ளேன். தொழில் செய்து கொண்டுள்ளேன். ஆனால் அக்குபஞ்சரை சுவாசித்து அந்த சுவாசத்தை பயிற்சி பெற்று வருபவர்களுக்கு கொடுத்தவர் யார்? சொல்லுங்கள்....

ஆம்! எனது வாழ்க்கை துணை என்பதாற்க நான் இங்கு குறிப்பிடவில்லை. அக்குபஞ்சரே துணை என்று வாழ்ந்து கொண்டிருப்பவர் எனது துணைவியார் Prof. Dr. உஷாரவி அவர்கள்.

இன்றைக்கு 10 பாய்ண்ட் அக்குபஞ்சர், 50 பாய்ண்ட் அக்குபஞ்சர், 60 பாய்ண்ட் அக்குபஞ்சர் என பிரித்து அந்த அக்குபஞ்சர் என்ற அற்புத கலையை சிதைத்து அக்குபஞ்சரை

முழுமையாக உணராத, புரியாத, தெரியாத பலர்தான் அக்குபஞ்சர் நிபுணராக உள்ளார்கள். இதனால் சிறப்பாக அக்குபஞ்சரை செய்பவர்களுக்கும் கூட களங்கம்தான் ஏற்படுகின்றது.

அக்குபஞ்சருக்கு சட்டப் பிரச்சனை இல்லை என்பதனை தெளிவாக எடுத்துரைக்க வருகைதர வேண்டிய நமது சட்ட வல்லுநர் தனது சகோதரரியின் விபத்தின் காரணமாக வர இயலவில்லை. இருப்பினும் அதன் சாரம்சம் மட்டும் இங்கு சுருக்கமாக கூறிவிடுகின்றேன்.

அக்குபஞ்சரை கவனியுங்கள். அக்குபஞ்சரை படித்து சான்றிதழ் வைத்துள்ள அக்குபஞ்சர் நிபுணர்கள் அக்குபஞ்சர் சிகிச்சையளிக்க தடையில்லை. சட்டப்படி இது உறுதி செய்யபடுகின்றது. மேலும் இதற்கான ஓர் தனி டாகுமென்ட் பைல் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஜுலை 2017-க்குள் வழங்கப்படும்.

நமது CIA உறுப்பினர்களுக்கென ஓர் மறு நினைவுப் பயிற்சியும், முழுமையான அக்குபஞ்சர் நிபுணராகும் வகையில் ஓர் பயிற்சியினை ஏற்பாடு செய்ய உள்ளோம். உடனே உங்களது திறமை மேல் CIA சந்தேகம் கொள்வதாக நினைக்க வேண்டாம். ஏனென்றால் ஒரு சிலருக்கு அக்குபஞ்சர் பற்றிய போதிய நுண்ணறிவு குறைவாகவே உள்ளது. அப்படி உள்ளவர்களில் ஒரு சிலர் அதை தெரிந்தும் கூட எங்கே தெரிந்து கொள்வது என ஓர் மன உளைச்சலுக்கு உள்ளாகி அவதிப்படுகின்றனர்.

CIA உறுப்பினரும் அக்குபஞ்சர் ஒன்றே சுவாசம் என உள்ள பேராசிரியை Dr. உஷாரவியை கொண்டே இப்பயிற்சியினை நடத்த முடிவு செய்துள்ளோம். இப்பயிற்சியானது கடலூரில் மட்டுமே நடைபெறும். மூன்று பேட்ச்சாக நடத்தப்பட உள்ளது. 1 முதல் பேட்ச் என்பது CIAவில் 2010-க்கு பின் உறுப்பினராக சேர்ந்தவர்களுக்கு மட்டுமே. இதில் விருப்பம் உள்ளவர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம். 2018 ஏப்ரலுக்கு முன்பாக CIAவின் அனைத்து உறுப்பினர்களுக்கு மறு தகுதி தேர்வு நடத்தப்படும். அதில் தகுதியிழப்பிற்கு உள்ளாகும் உறுப்பினர்கள் தகுதியினை வளர்த்து கொள்ள மூன்று மாதம் அவகாசம் வழங்கப்படும். தவறும்பட்சத்தில் CIAல் இருந்து நீக்கப்படும்.

2010-க்கு பின் உறுப்பினராக இணைந்தவர்களுக்கான மறு பயிற்சி முகாம் ஆகஸ்ட் 4, 5, 6 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தேதிகளில் நடைபெறும். இந்த மூன்று நாள் பயிற்சியில் அதிகபட்சமான அக்குபஞ்சர் அறிவை வளர்த்து கொள்ள முடியும். பயிற்சி பேராசிரியை Dr. உஷாரவியால் நடத்தப்படும். தங்கும் இடம், பயிற்சி அனைத்தும் முற்றிலும் இலவசம். உணவு சொந்த பொறுப்பு. பயிற்சி முடிந்த பின் உங்களுக்கு பிடித்திருப்பின் உங்களால் இயன்ற நன்கொடையை CIA Trust-க்கு வழங்கலாம்.

செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் 2005 முதல் 2009 முடிய உறுப்பினராக இணைந்தவர்களுக்காக பயிற்சி நடைபெறும். 2005-க்கு முன் உறுப்பினராக இணைந்தவர்களுக்கு ஜனவரி அல்லது பிப்ரவரி 2018-ல் பயிற்சி நடைபெறும்.

CIAவின் அறக்கட்டளை கட்டிடம் பணி நடந்து கொண்டுள்ளது. பண பற்றாக்குறையின் காரணமாக பணி காலதாமதம் ஆகி கொண்டுள்ளது. இந்த நிதியாண்டிற்குள் கட்டிடம் திறப்பு விழா செய்யப்படும் என்பதனையும் இங்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நமது உறுப்பினர்களுக்கு குரூப் இன்சூரன்ஸ் பாலிஸிக்கு பாலிஸி நிறுவனத்திடம் பேசி ஏற்பாடு செய்து கொண்டுள்ளோம். விபத்து மற்றும் மரணம் ஏற்படும்பொழுது உறுப்பினர்களுக்கு பாலிஸி தொகை கிடைக்கும் வண்ணமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணியும் எதிர்வரும் ஜுலை 2017-ல் முடிவடைந்து உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

QR பார் புதிய அடையாள அட்டையினை மறுநினைவு பயிற்சிக்கு வரும்பொழுது அந்தந்த உறுப்பினர்கள் வசம் உடனடியாக தரப்படும் வண்ணமாக திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கென தனி விண்ணப்பப்படிவம் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது. அதை பூர்த்தி செய்து மெயிலில் மட்டுமே அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

அக்குபஞ்சர் உறவுகளே மீண்டும் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்வது என்னவென்றால் உறவுகள் மேம்பட வேண்டுமெனில் உண்மைகள் உயிர்த்தெழ வேண்டும். ஆம் உண்மையான உண்மைகள் இன்றைய காலகட்டம் உண்மையைப் போலத்தான் செயல்படுத்தி கொண்டுள்ளார்கள் பலர்! அது வேண்டாம். அவற்றால் பயணம் செய்யும் தூரம் குறைவாகிவிடும். உண்மையை உண்மையாகவே செயல்படுத்தினால் மட்டுமே அது நெடும்பயணமாகவும் நயமான பயணமாகவும், நேர்மையான பயணமாகவும் இருக்கும்.

CIA ஓர் ஆலமரம் என்பதனை அறிவீர்கள். அதை மீண்டும் மெய்பிக்கும் வகையில் ஒவ்வொரு உறுப்பினர்களும் அக்குபஞ்சரில் தெரியாத விசயங்களை முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டும். நமது CIA அதற்கான ஆக்கப்பூர்வமான பணிகளை சிறப்புற மேற்கொண்டு கொண்டே உள்ளது. பலரும் CIAவின் FACEBOOK வலைதளம் ஆகியவற்றில் உள்ளே நுழைவதேயில்லை. அதே நேரத்தில் வேறு விசயங்களை பார்க்கத்தான் செய்கின்றீர்கள் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். யோசித்து பாருங்கள்!

இந்த தருணத்தில் நெஞ்சில் என்றென்றைக்கும் வீற்றிருக்கும்.. நினைவு கூர்ந்து நன்றி பாராட்டி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் விதை வழங்கியுள்ளோம். கேரிபேக் தவிர்த்துள்ளோம். இதை நீங்களும் கடைபிடியுங்கள். சமுதாய சிந்தனை என்பது CIA உறுப்பினர்களுக்குண்டு. அது CIAவின் மூலமாக ஆரம்பிக்கட்டும். உங்கள் அனைவருக்கும் இதயப்பூர்வமான நன்றியினையும், வாழ்த்துக்களையும் பெருமகிழ்ச்சியோடு கூறி அடுத்த தேர்தலில் என் பணி ஏற்க உங்களில் ஒருவர் தயாராகி விடுங்கள் என கூறி நான் விடைபெறும் முன் இப்பொழுது தற்காலிகமாக விடைபெறுகின்றேன். வாழ்க அக்குபஞ்சர்! வளர்க அதை வளர்ப்பவர்கள்!!

## QR CODE ID CARD

Dear CIA members Council of Indian Acupuncturists have Introduced new ID Card with QR Card. All members are requested to fill the form which is uploaded in our Council of Indian Acupuncturists website. Members who register their details will be issued new QR code ID shortly.

Registration process as follow

www.ciaglobal.org
↓
Registration
↓
QR Code Application
↓
Enter the details
↓
Register

**Note :** Once Registration over, if any correction kindly inform to CIA admin office contact : 9367622257.

### COUNCIL OF INDIAN ACUPUNCTURE-ன் மரியாதை



திருநெல்வேலி சமூக சேவை சங்கம் உதவியோடு CIA நடத்தும் அக்குபஞ்சர் கிளினிக்கிற்கு பல வகையில் உதவியாக இருந்த இயக்குனர் **Father. Joseph Johnson** அவர்களுக்கு CIA சார்பில் மரியாதை செய்யப்பட்டது.

### சந்தா செலுத்தாத உறுப்பினர்களுக்கு

CIAவின் வருட சந்தாவை அதன் குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்தாத உறுப்பினர்களுக்கு ஒரு கடைசி வாய்ப்பினை CIA நிர்வாக ஏற்படுத்தி கொடுக்கின்றது.

எதிர்வரும் ஜுலை 10, 2017க்குள் ரூ.1500/-யினை செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம். அப்படி தவரும்பட்சத்தில் உங்களது உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க முடிவு எடுக்கப்படும் என்பதனை CIA செயற்குழு தெரிவித்துக்கொள்கின்றது.

## 07-05-2017 அன்று நடைபெற்ற CIA பொதுக்குழு கூட்டத்தின் நிகழ்வுகள் ஒரு சில புகைப்படங்களாக...
































# மூலிகை சிகரம்

"சிகரம்" தொட நினைப்பது முக்கியமல்ல ! ஆனால் அந்த "சிகரம்" பயனுள்ளதாக இருக்கவேண்டும். பலருக்கு பயன் படுவதாக இருக்க வேண்டும்.

அதுதான்

**Dr. C.A. ரவி & Prof. Dr. உஷாரவி**

மூலிகை - அக்குபஞ்சர் தம்பதிகளின்

## மூலிகை சிகரம்



உலகம் என்பது பரந்து, விரிந்தது. உலக நலனில் முக்கிய பங்கு வகிப்பது மூலிகைகள். இன்றைய பல இரசாயண மருந்துகளின் மூலப்பொருட்களின் ஆதாரமே மூலிகைகள் தான். அப்படிப்பட்ட மூலிகைகளை பற்றி அறிந்தும் ஏராளமாக அறியாத விசயங்களையும் கொண்டுவந்து சேர்ப்பது "மூலிகை சிகரம்".

நாள் : 20-08-2017 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 9.00 - மாலை 5.00 மணி

இடம் : ஹோட்டல் அண்ணாமலை இண்டர்நேஷனல் (A/c) பாண்டிச்சேரி.

கட்டணம் ரூ.500/-

நிகழ்வுகள்

தலைமை :

**Dr. C.V. சந்திரபாபு** M.D.,
C.M.O. அரசு மருத்துவமனை (மேனாள்), கடலூர்.
R & D Advisory Committee, Vee Herbal Care (P) Ltd

| | |
|---|---|
| காலை 9.00 மணி | பதிவு & இசை நிகழ்ச்சிகள் |
| 9.30 மணி | குத்துவிளக்கேற்றுதல் |
| 9.35 மணி | வரவேற்புரை - **Prof. Dr. உஷாரவி**<br>இணை சேர்மேன் - தி சுசான்லி குரூப்ஸ், இயக்குனர் - வீ ஹெர்பல் கேர் (பி) லிட். |
| 9.45 மணி | Vee Herbal Care PRIVATE LIMITED மருந்துகள் ஓர் அறிவியல் பார்வையில்<br>**Dr. அர்ச்சனா** |
| 10.30 மணி | பண்டைய கால மூலிகைகளும் நவீன கால மூலிகைகளும்<br>**Prof. Dr. V. கோபால்** M.Pharm., MBA., Ph.D., MISTE., FICS., MTPG&RIHS.,<br>Principal, College of Pharmacy, Registrar (Academic)<br>A Govt. of Puducherry Institution. |
| 11.30 மணி | தேநீர் இடைவேளை |
| 12.00 மணி | Vee Herbal Care PRIVATE LIMITED மருந்துகளை உபயோகித்தவர்களின் அனுபவங்கள் |
| பிற்பகல் 1.00 மணி | மதிய உணவு |
| 2.00 மணி | நோய் தீர்க்கும் மூலிகைகள் அறிவியல் பார்வையில்<br>**Prof. Dr. N. லோகநாதன்** M.Sc., Ph.D.,<br>ஆசிரியர் - பூர்வீக மருத்துவ நூல் களஞ்சியம்<br>நிறுவனர் - பூர்வீகம், மூலிகையியல் உயர் ஆய்வு மற்றும் பயிற்சி மையம் |
| 2.45 மணி | Vee Herbal Care PRIVATE LIMITED நிறுவனத்தின் வியாபார வாய்ப்புகள்<br>**Dr. C.A. ரவி,** Managing Director |
| மாலை 3.30 மணி | சாதனையாளர்களை பாராட்டுதல், கௌரவித்தல் |
| 4.30 மணி | தேநீர் |
| 4.45 மணி | லக்கி டிரிப் |
| 5.00 மணி | நன்றியுரை - **Dr. K.G. மனோஜ்**<br>இணை இயக்குனர், Vee Herbal Care (P) Ltd |
| | நாட்டுப்பண் |

மூலிகை சிகரம் நிகழ்ச்சியில், மூலிகைகள் பற்றிய அறிவியல்பூர்வ தகவல்கள் மற்றும் மூலிகை கண்காட்சி, கருத்தரங்கு என பலவிதமான நிகழ்வுகளை மிக சிறப்பாக எடுத்துரைக்கும் வண்ணமாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது. தவறாது கலந்துகொண்டு பயன் பெறவும். 15-07-2017க்கு முன்பதிவு செய்பவர்களுக்கு மட்டும் சிறப்பு பரிசு வழங்கப்படும்.

ADVT


## இலவச அக்குபஞ்சர் முகாம்

உறுப்பினர்களுக்கு அன்பு வேண்டுகோள்! தங்களது பகுதியில் அவ்வப்பொழுது அக்குபஞ்சர் விழிப்புணர்வு முகாம் மற்றும் இலவச சிகிச்சை முகாம்களை நடத்தும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## CIA செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பு கூட்ட அழைப்பு

03-08-2017 அன்று காலை 10.00 மணிக்கு CIAவின் செயற்குழு கூட்டம் கடலூர், மஞ்சக்குப்பம், தி சுசான்லி அக்குபஞ்சர் & ஆயுர்வேதிக் மருத்துவமனையில் நடைபெறும்.

**தலைவர் - CIA**

## அறிவிப்பு

CIA News Letter இனி இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வரும். நமது உறுப்பினர்கள் விளம்பரங்கள் வெளியிடலாம்! வெளிநபர்கள் விளம்பரங்களுக்கு கட்டணம் தனி!

## விளம்பர கட்டணம்

| | | உறுப்பினர் | உறுப்பினர் அல்லாதோர் |
|---|---|---|---|
| விசிட்டிங் கார்டு சைஸ் (8 cm x 5 cm) | = | 500.00 | 750.00 |
| இரண்டு விசிட்டிங் கார்டு சைஸ் | = | 900.00 | 1400.00 |
| நான்கு விசிட்டிங் கார்டு சைஸ் | = | 1,500.00 | 2000.00 |

மேலும் விபரங்களுக்கு : **93676 22257**


For Private Circulation Only

# CIA NEWS LETTER

கவுன்சில் ஆப் இந்தியன் அக்குபஞ்சரிஸ்ட்ஸ்

**Dr. C.A. ரவி,** நிறுவனர், தலைவர், ஆசிரியர்



முகவரி : **COUNCIL OF INDIAN ACUPUNCTURISTS**
No.31, 32, RAJAGOWRI NAGAR, KORAVALLIMEDU,
MATHIKRISHNAPURAM, PUDUCHERRY - 607 402.
Cell: 93676 22257 Website : ciaglobal.org
E-mail : ciaglobalacupuncturists@gmail.com


பெறுநர்.................................................................................

.................................................................................

.................................................................................

.................................................................................